பேசுவதற்கு நான் mike கொடுக்கவில்லை. நீங்கள் பேசுவது அவைக் குறிப்பில் ஏறாது. தயவுசெய்து உட்காருங்கள். நேற்று உங்களுக்கு வாய்ப்புக் கொடுத்துவிட்டேன், பேசினீர்கள். Please sit down. நேற்றே இதுகுறித்து விவாதிக்கப்பட்டது.

(புதிய தமிழகம் கட்சி உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவையிலிருந்து வெளியேறினார்.)

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக்கழகச் சட்டங்கள் (திருத்தம் மற்றும் நீக்கம்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

4. விதி 110–ன்கீழ் அறிக்கை

நாகப்பட்டினத்தில் மீன் வளப் பல்கலைக்கழகம் நிறுவுதல் குறித்த மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110–ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு*

முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1,076 கிலோ மீட்டர் நீளமுள்ள கடற்கரையினைக் கொண்டுள்ளது. 591 கடல் மீனவக் கிராமங்களில் சுமார் 9 இலட்சம் மீனவ மக்கள் உள்ளனர். 6,200 மீன்பிடி விசைப் படகுகளும் 50,000 பாரம்பரிய கலன்களும் மீன்பிடிப்பில் ஈடுபட்டுள்ளன. தமிழ்நாட்டில் கடல் மீன் உற்பத்தி 4 இலட்சம் டன் ஆகும். தமிழ்நாட்டிலிருந்து 2,000 கோடி ரூபாய் மதிப்புள்ள கடல் பொருட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன.

மீன் வளத் துறையினை நவீனப்படுத்துவதற்கும், கடல் பொருள் ஏற்றுமதியில் தமிழ்நாட்டினை முதன்மை மாநிலமாக ஆக்கிடவும், எனது தலைமையிலான அரசு அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) மீன் பதன அலகுகள் அமைத்தல், மீன்பிடி விசைப் படகுகள் வாங்குதல், ஆழ்கடல் மீன்பிடிப்பினை மேற்கொள்ள ஊக்குவிப்பு உதவிகள் அளித்தல், உள் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், மீனவர்களுக்குத் தேவையான உதவிகள் அளித்தல் போன்ற பல முன்னோடி நடவடிக்கைகள் எனது அரசால் எடுக்கப்பட்டு வருகின்றன. குளிரூட்டும் நிலையங்கள் அமைத்தல், சிப்பம் கட்டுதல், விற்பனை மற்றும் போக்குவரத்து வசதிகள் அதிகரித்தல் ஆகியவற்றிற்கான கொள்கைகளை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளும் துவங்கப்பட்டுள்ளன.

மீனவ நண்பன், இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) 1977 ஆம் ஆண்டு இந்தியாவின் இரண்டாவது மீன் வளக் கல்லூரியை தூத்துக்குடியில் நிறுவினார். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழகத்தில் மீன் வளத்தை மேம்படுத்தவும், மீன் வளத்தைப் பெருக்குவதில் நவீன தொழில்நுட்பங்களை அறிமுகப்படுத்தி, அதன்மூலம் மீனவர்களின் வருவாய் மேம்பாடு அடையச் செய்வதற்கும், மீன் வளக் கல்வியை மேலும் ஊக்குவிப்பது அவசியம் ஆகிறது. மீன் வள மேம்பாட்டில் முன்னோடியாக உள்ள நாடுகளில் மீன் வளக் கல்விக்கென பல்கலைக்கழகம் நிறுவப்பட்டுள்ளது. இந்தியாவிலும், நமது அண்டை மாநிலமான கேரள மாநிலத்தில்,

2011 செப்டம்பர் 13] [செல்வி ஜெ ஜெயலலிதா]

கடந்த ஏப்ரல் மாதத்தில் மீன் வளம் மற்றும் பெருங்கடல் அறிவியல் பல்கலைக்கழகம் ஒன்று நிறுவப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் மீன் வளத்தைப் பெருக்குவதில் பல்வேறு முன்னோடி நடவடிக்கைகளை எடுத்துவரும் அதேவேளையில், அதற்குத் தேவையான கல்வி அறிவைப் பெருக்குவதற்கும் உரிய முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என எனது தலைமையிலான அரசு முடிவு எடுத்துள்ளது.

இந்த அடிப்படையில் மீன் வளத்திற்கென மீன் வளப் பல்கலைக்கழகம் ஒன்றை நிறுவ எனது தலைமையிலான அரசு முடிவு செய்துள்ளது என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நாகப்பட்டினம் மாவட்டம், 188 கிலோ மீட்டர் நீளமுள்ள கடற்கரையைக் கொண்டுள்ளது. மீன் பிடித்தல், உலர் மீன் உற்பத்தி மற்றும் இறால் வளர்ப்பு ஆகியவை இம்மாவட்டத்தின் முக்கியமான பொருளாதார நடவடிக்கைகள் ஆகும். இம்மாவட்டத்தில் 9,000 மீன்பிடிக் கலன்கள் மீன்பிடிப்பில் ஈடுபட்டுள்ளன. நாகப்பட்டினம் மீன்பிடித் துறைமுகம் நவீனப்படுத்தப்பட்டு வருகிறது. எனவே, மீன் வளப் பல்கலைக்கழகம் அமைப்பதற்கு நாகப்பட்டினம் மிகவும் உகந்த இடமாக உள்ளதால், இந்த மீன் வளப் பல்கலைக்கழகம் நாகப்பட்டினத்தில் நிறுவப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

நாகப்பட்டினம் தாலுகாவில் பனங்குடி மற்றும் நாகூர் கிராமங்களில் 85 ஏக்கர் நிலப்பரப்பில் சுமார் 30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இந்த மீன் வளப் பல்கலைக்கழகம் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10—50

முதற்கட்டமாக, தூத்துக்குடியில் உள்ள மீன் வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், மீன் வளத் துறையின் ஆராய்ச்சிப் பிரிவு, சென்னையில் உள்ள மீன் வளத் தொழில்நுட்பப் பயிற்சி நிலையம், சென்னையில் உள்ள மீன் வளப் பணியாளர் பயிற்சி நிலையம், தமிழ்நாடு கடல்சார் கழகம் ஆகியவை இந்தப் புதிய பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்படும். புதிதாக அமைக்கப்படவுள்ள இந்தப் பல்கலைக்கழகத்தில் இறால் வளர்ப்பு, கெண்டை மீன் வளர்ப்பு, வண்ண மீன் வளர்ப்பு, மீன்

பதப்படுத்துதல் மற்றும் மீன் மதிப்புக் கூட்டிய பொருட்கள் உற்பத்தி, மீன்பிடிப் படகு மற்றும் இயந்திரப் பராமரிப்பு, கடலாள் பயிற்சி மற்றும் நீர்வழிப் பயிற்சி ஆகிய பாடப் பிரிவுகளில் பட்டங்கள் மற்றும் பட்டயங்கள் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) தொழில்நுட்பப் பரிமாற்றம், விரிவாக்கக் கல்வி, மனித வளப் பயிற்சி மற்றும் மீன் வளப் பயன்பாடு ஆகியவற்றினை மேம்படுத்துவதில் இந்தப் பல்கலைக்கழகம் பெரும் பங்கு வகிக்கும். மேலும், இந்தப் பல்கலைக்கழகத்தில் பல்வேறு பிரிவுகளில் பயிற்சி பெறும் நபர்கள், உள்நாடு மற்றும் உலக அளவில் வேலைவாய்ப்பு பெறவும் இது வழிவகுக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

5. விதி 110—ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அளித்த அறிக்கைக்கு நன்றி தெரிவித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.

முனைவர் செ.கு. தமிழரசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனவ மக்களின் பிரதிநிதிகளாக இருந்த சிந்தனைச் சிற்பி சிங்காரவேலருக்கும், சமுதாயப் பேரொளி ஜீவரெத்தினத்திற்கும் அவர்களுக்கு நினைவு மண்டபங்கள் அமைக்கப்படுமென நேற்றைய தினம் அறிவித்து மிகப் பெரிய பெருமையும் சிறப்பும் சேர்த்த புரட்சித் தலைவி, நம்முடைய முதலமைச்சர் அம்மா அவர்கள், இன்றைக்கு இந்தியாவிற்கே ஒரு முன்னுதாரணமாக (மேசையைத் தட்டும் ஒலி) மீன் வளப் பல்கலைக்கழகம் தொடங்கி, தமிழகத்திலே இருக்கிற மீனவ மக்களுடைய வாழ்விலே ஒளிவிளக்காக உருவாக்கியிருக்கிறார்கள் என்பதை நான் வரவேற்கிறேன். 'முடிந்தால் முடியும்; தொடர்ந்தால் தொடரும், என மீனவர்களுடைய வாழ்க்கை அவலத்தை ஒரே வரியிலே பாடினார் நம்முடைய புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) 'அவர்கள் வாழ்வு அப்படி அல்லலிலே முடியாது; எப்போதும் வளமாகத் தொடரும்; துணை நிற்க நான் இருக்கிறேன்' (மேசையைத் தட்டும் ஒலி) என்று இன்றைக்கு அவர்களுடைய நம்பிக்கை நட்சத்திரமாக மீன் வளப் பல்கலைக்கழகத்தை உருவாக்கியிருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பாராட்டி, வரவேற்று அமைகிறேன்.